தேதி - 27.10.2025.

அசல் வழக்கு எண். 173/2004

**D.w**.2 - திரு. முகமதுகாலித் உதீன்ஒலித்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. என்னை பீர் முகமது இக்பால் சாட்சி சொல்ல வரும்படி கேட்டார். அதனால் சாட்சி சொல்கிறேன். நான் சொன்ன விசயங்களை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்தார். அதில் நான் கையெழுத்து செய்தேன். என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தஷ்தாவேசுகள் சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியும். நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் இயந்திரவியல் பழுதுநீக்கும் தொழில் செய்து வருகிறேன். நான் வருமான வரி எதுவும் கட்டவில்லை. எனக்கு PAN card உள்ளது. வாதி, பிரதிவாதிகள் என் பெரிய தகப்பனாரின் வாரிசுகள். 2ம் வாதி அனார்கலியின் கணவர் பெயர் தாஜுதீன். மேற்படி தாஜுதீன் மற்றும் அனார்கலியின் மகன் பசீர் அகமது. பசீர் அகமது மற்றும் தாஜுதீன் எதிராக மதுரை டவுன் முன்சீப் கோர்ட்டில் அசல் வழக்கு எண்.849/2013 வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்று சொன்னால் தாக்கல் செய்திருந்தேன். அந்த வழக்கில் தாஜுதீனுக்கு தீர்ப்பாகியுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த தீர்ப்பாணையின் நகல் என்னிடம் காட்டப்படுவது தான் என்று சொன்னால் அது சரிதான். அது **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் மீது பசீர் அகமது என்பவர் தாஜுதீன் மூலமாக OS.807/2013 வழக்கை தாஜுதீன் எதிராக மதுரை டவுன் முன்சீப் கோர்ட்டில் தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் தாக்கல் செய்திருந்தார்.

அது சம்பந்தமான தீர்ப்பு நகல் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அந்த வழக்கு சொத்து சம்பந்தமாக மதுரை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு உள்ளது என சாட்சி கூறுகிறார்). அதன் மேல் மேல்முறையீடு இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. சுமார் 15 வருடங்களாக என் குடும்பத்திற்கும், வாதி குடும்பத்திற்கும் விரோதம் இருந்து வருகிறது என்று சொன்னால் அது சரியல்ல. 1988 செப்டம்பர் ல் எனது வயது என்ன என்று கேட்டால் 04.12.1969 ல் பிறந்தேன். 1988 செப்டம்பரில் வாய்மொழி பாகம் பிரிக்கப்பட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. அது சம்பந்தமாக பத்திரம் எதுவும் பார்த்துள்ளேன் என்று கேட்டால் 16.09.1988 வெள்ளிக்கிழமை அன்று வெண்ணிலை பத்திரம் ஒன்று எழுதினார்கள். அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டேனா என்று கேட்டால் சாட்சி கையெழுத்து போடவில்லை. எனது நிரூபணவாக்குமூலத்தில் பக்கம் 4 பாரா 3-ல் குறிப்பிட்டுள்ளதுபோல் எந்த பாகப்பிரிவினையும் நடைபெறவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. எந்த தேதியிலும் வாய்மொழியாகவோ, எழுத்துமூலமாகவோ சுல்தான் அலாவூதீன் உடைய வாரிசுகளுக்கு இடையே பாகப்பிரிவினை எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. வழக்கு சொத்துக்கள் என்னென்ன என்பது எனக்கு தெரியும். நான் எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள தாவா 2வது அயிட்ட சொத்திற்கு சொல்லியுள்ள அளவு விபரப்படி பார்த்தாலும் அவ்வாறு பாகப்பிரிவினை நடக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் அது சரியல்ல. (பொதுப்பாதையும் சேர்த்து அளவு கொடுக்கப்பட்டுள்ளது என சாட்சி கூறுகிறார்). வாதி தரப்பில் யார் யாரை சாட்சியாக விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. 5ம் வாதி அம்சத்ராணியின் பிறந்த தேதி 04.05.1970 பிறந்தார் என்று

சொன்னால் அவர் என் தங்கை. 16.09.88 ம் தேதி ரூ.1,00,000/- 1 ம் வாதி தனக்காவும், 5 ம் வாதிக்காகவும் பெற்றுக்கொண்டதாகவும், மற்ற வாதிகள் மற்றும் 7 ம் பிரதிவாதி 1 ம் பிரதிவாதியிடமிருந்து 1 லட்சம் பெற்றுக்கொண்டதாக பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. 1 லட்சம் பெற்றுக்கொண்டதாக ரசீது தாக்கல் செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாது. வாதிகள் பாகபாத்திய விடுதலை பத்திரம் நிறைவேற்றிகொடுத்ததாக பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. வாதிகள் தனிதனியாக பாகபாத்திய விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்ததாக கூறியுள்ளதும் பொய்யானது என்று சொன்னால் அது சரியல்ல. எனது நிரூபணவாக்குமூலத்தில் பாரா 6, 7, 8 ல் சொல்லியுள்ள பரிவர்த்தனைகள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் அது சரியல்ல. அந்த பத்திரங்களில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. 3 முதல் 5 வாதி மற்றும் 8 ம் பிரதிவாதியின் திருமணத்தை 1, 2 ம் வாதியும், 2 ம்வாதியின் கணவரும் நடத்தி வைத்தார் என்றும் சொன்னால் அது சரியல்ல. 3 ம் வாதி சையது ராபியாவின் திருமணம் 1978 ல் நடந்தது. 8 ம் பிரதிவாதி அப்துல் சகிலாவின் திருமணம் 1982 ல் நடந்தது. 4 ம் வாதி லைலத்துள் பசரியாவின் திருமணம் 1984 ல் நடந்தது என்று சொன்னால் அது சரிதான். 5 ம் வாதி அம்சத்ராணியின் திருமணம் 1988 ல் நடந்தது என்று சொன்னால் அது சரிதான். அந்த சமயத்தில் நான் சிறுவர் என்றும் மேற்படி திருமணங்களில் என்ன நடந்தது என்றும் எனக்கு தெரியாது என்றும் சொன்னால் அது சரியல்ல. வழக்கிக்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்களில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. (அந்த ஆவணங்கள் இயற்றபட்டபோது தான் இருந்ததாக சாட்சி கூறுகிறார்). நான் சொல்லியுள்ளதுபோல் சமரச பேச்சுவார்த்தை நடக்கவில்லை என்று சொன்னால் அது

சரியல்ல. நான் சொல்லியுள்ள சமரச படி டிடி, ரொக்கம் பெற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. அவ்வாறு டிடி, ரொக்கம் பெற்றுக்கொண்டதாக நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. வாதிகளுக்கும், எங்களுக்கும் விரோதம் உள்ளது என்றும் அதனால் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் அது சரியல்ல.

Sd/-முகமதுகாலித் உதீன்ஒலித்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN
Date: 2025.10.28 18:06:47 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

மதுரை.